 சேலம் மாவட்டம், மேட்டூர் ஆர்.சி. பிளாண்ட் ரசாயனக் கழிவுநீரால் தோட்டக்காடுகள் மற்றும் பயிர்கள் பாதிக்கப்படுவதோடு வீரக்கல்புதூர் ஊராட்சிப் பகுதிகளில் விவசாயக் கிணறுகளும் பாதிக்கப்படுவது குறித்து:

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : கழிவுநீரைச் சுத்தப்படுத்தும் வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நிறுவனம் கேட்டுக்கொள்ளப்படும்.

திரு. ஆ. நல்லசிவம் : அங்கே உள்ள நிலங்கள் சதுப்பு நிலங்களாக மாறிக்கொண்டு வருகிற காரணத்தால், அந்த நிலங்களின் சொந்தக்காரர்களுக்கு நஷ்ட ஈடு தருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆர். சௌந்தரராஜன் : சதுப்பு நிலங்களை மீண்டும் பயிர் செய்ய ஏற்ற நிலங்களாக மாற்ற ஏதாவது வழி வகை இருக்கின்றதா என்று ஆராயப்படும்.

7. அரசின் தீர்மானங்கள்.

(1) மத்திய கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்த மட்டில் நடுத்தர கால மாற்று வசதிக் கடனுக்கான உத்தரவாத வரையறையை உயர்த்துதல் குறித்து.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

" தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961), 73-டி பிரிவின்கீழ் சொல்லியுள்ளவாறு, மாநில சட்டமன்றத்தின் ஒப்புதலுடன், மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி பெறும் குறுகிய கால கடன், நடுத்தரக்காலக் கடன், நடுத்தரக் கால மாற்றுவசதிக் கடன்களுக்கு அரசின் உத்தரவாத உயரளவு வரையறையை முறையே ரூ. 250 இலட்சம், ரூ. 1,490 இலட்சம், ரூ. 7,400 இலட்ச அளவிற்கு கூட்டுறவுத் துறையின் 1978 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் ஒன்பதாம் நாளிட்ட 82 ஆம் எண் அரசாணையில் தமிழ்நாடு அரசு உயர்த்தியுள்ளதாலும்,

மத்திய கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தமட்டில் நடுத்தர கால மாற்று வசதி கடனுக்கான உயரளவு உத்தரவாத வரையறையை ரூ. 10.900 இலட்சத்திற்கு உயர்த்துவது அவசியம் ஏற்பட்டுள்ளதாலும்,

தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961) 73-டி பிரிவின் கீழ் சொல்லியுள்ளவாறு மத்திய கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தமட்டில் நடுத்தர கால மாற்று வசதிக் கடனுக்கான உத்தரவாத வரையறையை

ரூ.10,900 இலட்சத்திற்கும், மொத்த வரையறையை ரூ.12,640 இலட்சத்திற்கும் உயர்த்த தமிழ்நாடு சட்டமன்ற மேலவை தீர்மானிக்கிறது''

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

'' தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961), 73-டி பிரிவின்கீழ் சொல்லியுள்ளவாறு, மாநில சட்டமன்றத்தின் ஒப்புதலுடன், மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி பெறும் குறுகிய கால கடன் நடுத்தரக் காலக்கடன், நடுத்தரக் கால மாற்றுவசதிக் கடன்களுக்கு அரசின் உத்தரவாத உயரளவு வரையறையை முறையே ரூ.250 இலட்சம், ரூ.1490 இலட்சம், ரூ,7400 இலட்ச அளவிற்கு கூட்டுறவுத் துறையின் 1978 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் ஒன்பதாம் நாளிட்ட 82 ஆம் எண் அரசாணையில் தமிழ்நாடு அரசு உயர்த்தியுள்ளதாலும்,

மத்திய கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்த மட்டில் நடுத்தரர கால மாற்று வசதி கடனுக்கான உயரளவு உத்தரவாத வகையுறையை ரூ.10,900 இலட்சத்திற்கு உயர்த்துவது அவசியம் ஏற்பட்டுள்ளதாலும்,

தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961) 73-டி பிரிவின்கீழ் சொல்லியுள்ளவாறு மத்திய கூட்டுறவு.வங்கிகளைப் பொறுத்த மட்டில் நடுத்தர கால மாற்று வசதிக் கடனுக்கான உத்தரவாத வரையறையை ரூ.10,900 இலட்சத்திற்கும், மொத்த வரையறையை ரூ.12,640 இலட்சத்திற்கும் உயர்த்த தமிழ்நாடு சட்டமன்ற மேலவை தீர்மானிக்கிறது.''

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(2) தமிழ்நாடு பருத்திப் போக்குவரத்து விதிகளின் வரைவுத் திருத்தத்திற்கு ஏற்பளித்தல்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

'' தமிழ்நாடு பருத்திப் போக்குவரத்து விதிகளின் 7,8-ஆவது விதிகளைத் திருத்தி, 1923 ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்து சட்டத்தின் (மத்திய சட்டம் 3/1923) 7-வது பிரிவின்கீழ் அரசால் வெளியிடப்படவிருக்கும் கீழ்க்கண்ட வரைவு அறிவிப்பு, மேற்சொன்ன சட்டத்தின் 8-வது பிரிவில் சொல்லியுள்ளவாறு ஏற்பளிக்கப்படுவதாக.